## தமிழகத்தின் பல்வேறு வளர்ச்சி திட்டங்கள்

# மத்திய உள்துறை அமைச்சரிடம் முதலமைச்சர் கோரிக்கை மனு

சென்னை, நவ. 22-

தமிழகத்தின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவிடம் முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி கோரிக்கை மனு வழங்கினார்.

சென்னையில் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் ரூ.61,843 கோடியில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்கு 15 சதவீதம் பங்கு மூலதனம் வழங்குவதற்குப் பதிலாக, 10 சதவீத தொகையை மட்டுமே வழங்க மத்திய அரசு பரிந்துரைத்துள்ளது.

மெட்ரோ ரயிலின் முதல் கட்டத் திட்டம், மத்திய ,மாநில அரசுகளின் 50 சத வீத பங்கு மூலதனத்துடன் செயல்படுத்தப்பட்டது. இதுபோன்ற முறையை இரண்டாவது மெட்ரோ ரயில் திட்டத்துக்கும் கடைப் பிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநில அரசுகளின் கூட்டாண்மையுடன் மெகா ஜவுளி தொழில் பூங்காக்கள் அமைக்கும் திட்டத்தை மத்திய அரசு முன்வைத்துள்ளது.

தமிழகத்தில் விருதுநகர், தருமபுரி ஆகிய இரண்டு மாவட்டங்களில் ஜவுளி தொழில் பூங்காக்கள் திட்டத்தைச் செயல்படுத்த இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.இதுபோல

மருந்து மற்றும் மருத்துவ கருவிகள் பூங்காவை சென்னைக்கு அருகில் அமைக்க மாநில அரசு திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டங்களுக்கு உரிய தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதாரங்களை அளித்திட சம்பந்தப்பட்ட துறைகளுக்கு தாங்கள் அறிவுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

மேலும் கோதாவரி-காவிரி, கோதாவரி-குண்டாறு, நடந்தாய் வாழி காவிரி ஆகிய திட்டங்களைச் செயல்படுத்த தமிழக அரசு முடிவு செய்து பணிகளை தொடங்க தயாராக உள்ளதுஇந்தத் திட்டங்களுக்கான வரைவு அறிக்கைக்கு ஒப்புதல், நிதி உதவி போன்றவற்றிக்கு உடனடியாக அனுமதி அளித்திட அரசுத் துறைகளை தாங்கள் அறிவுறுத்த வேண்டும்.

இவ்வாறு கோரிக்கை மனுவை முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி அளித்துள்ளார்.